செய்தி வெளியீடு எண். 538 நாள். 20.08.2007

# செய்தி வெளியீடு

<u>ஒரிசா–தமிழக திரைப்படம், பண்பாடு, கலை மற்றும் கலாச்சார பரிவர்த்தனை அடிப்படையில் ஒரிசா மாநிலத்தின் கலை நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு கூட்டம்.</u>

சென்னையில் 15.9.2007 முதல் 17.9.2007 வரை ஒரிசா மாநில செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை இமேஜ் அரங்கம், எம்.ஆர்.சி.நகர், ராஜா அண்ணாமலைபுரத்தில் , ஒரிசா திரைப்படம், கலை–பண்பாடு, கலாசார பரிமாற்ற அடிப்படையில், ஒரியா நாட்டிய நாடகம், ஒரியா பழங்குடியினர் நடனங்கள் , மற்றும் ஒரியா திரைப்படங்கள், நிகழ்ச்சிகள் நடைபெறுவதையொட்டி அதன் தொடர்பான முன்னேற்பாடு கூட்டம், இன்று(20.8.2007) சென்னை–தலைமைச் செயலகத்தில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், ஒரிசா மாநில செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆணையர் மற்றும் செயலர், திரு பைஷ்னப் பி.மொஉறந்தி,இ.ஆ.ப., தமிழக சுற்றுலாத் துறைச் செயலர்(பொறுப்பு) திரு டி.எஸ்.ஸ்ரீதர்,இ.ஆ.ப., இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை செயலர் திரு எம்.ராமன்,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப., மற்றும் உத்கல் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.